பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை
ரு 2.50

தரமான சேட்டிங்
* சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஃஸூ பங்குனி மீ 20 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 24 (02 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-100

# யுத்த நிறுத்த அறிவிப்பு நாளை வெளிவரலாம்!

## அரசு - எதிர்க்கட்சி எம். பிக்களின் கூட்டு வேண்டுகோளும் சேர்ந்து வரும்

கொழும்பு, ஏப்ரல் 2

அரசாங்கத்தின் யுத்த நிறுத்த அறிவிப்பு அனேகமாக நாளை திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படலாம் என நம்பப் படுகிறது.

அதனுடன் சேர்த்து வன்செயல்களைக் கைவிடுமாறு அரசாங்க-எதிர்க்கட்சி எம். பி.க்கள் கூட்டாக விடுக்கும் வேண்டுகோளும் வெளியிடப்படும் என அறியவந்துள்ளது.

புத்தாண்டுக்கு முன்னர் நாட்டில் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் அரசாங்கம் இப்போது அதிக அக்கறை காட்டுகிறது.

அதன் நிமித்தம், அரசாங்கம் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவிக்க உத்தேசித்திருக்கிறது. அந்த அறிவிப்பு அனேகமாக நாளை திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று பலமாக நம்பப்படுகிறது.

தெற்கில் வன்செயல்களுக்குப் பின்னணியில் நிற்கும் ஜே. வி. பியின் 1971 பயங்கர வாதக் கிளர்ச்சியின் 18 ஆவது நினைவு தினம் புதன்கிழமையாகும். ஆகையால் அதற்கு முன்னர் தனது யுத்த நிறுத்த அறிவிப்பை அரசு வெளியிட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் சமாதானத் திட்டம் ஒன்றின் கீழ் யுத்த நிறுத்தம் ஒன்றுக்குச் சம்மதிக்கும்படி ஆயுதம் ஏந்தியுள்ள குழுக்களுக்கு அரசும் எதிர்க்கட்சிகளும் கூட்டாக வேண்டுகோள் விடுக்க முடிவு செய்துள்ளன.

இது குறித்து அரசாங்கத்தினரும் எதிர்க்கட்சியினரும் கடந்த வியாழன் ஓர் இணக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

02 - 04 - 1989
பங்குனி-20 ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09 - 11 முதல் 10 - 41 வரை
ராகுகாலம்:
04 - 41 முதல் 06 - 11 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஏகாதசி விரதம்

### பிந்திய செய்தி

## ஜனாதிபதி அழைப்பு

கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு வருமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று ஜே. வி. பிக்கு அழைப்பு விடுத்தார். (அ)

## இரு சிப்பாய்கள் சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப்ரல் 2

வத்தேகம பொலீஸ் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இலங்கை இராணுவத்தில் பணி புரிந்து வந்த இரண்டு சிப்பாய்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் சகோதரர்கள். ஒருவர் நமுனுகலயில் பணி புரிந்து வந்தார். மற்றவர் திருமலையில் சேவை புரிந்து வந்தார். (ஒ-எ)

## தெற்கில் 48 மணி நேரத்தில் இந்திய தொழில் அதிபர் உட்பட பதினேழுபேர் கொலை

கடந்த 48 மணிநேரத்தில் தென்பகுதியில் 17 பேர் கொல்லப்பட்டனர்என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தெஹிவளை வட்டாரத்தைச் சேர்ந்த இந்தியத் தொழில் அதிபர்.

ஜே. வி. பி. சந்தேக நபர்களே இக்கொலைகளைப் புரிந்தனர் என்று அரசு செய்தி கூறுகின்றது. (ஒ-எ)

## வல்வையில் சுற்றிவளைப்பு; சில இளைஞர்கள் கைதாகினர்

வல்வெட்டித்துறை, ஏப் 2

வல்வை, பொலிகண்டி, மயிலியதனை பகுதிகள் நேற்று திடீரென சுற்றிவளைக்கப்பட்டன. தேடுதலும் இடம்பெற்றது.

தேடுதலின்போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சிலர் பொலிகண்டி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திடீர் தேடுதலையடுத்து வல்வெட்டித்துறைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. சந்தை மற்றும் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

கடற்கரைப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் நேற்றுக் கேட்டன. (உ-160)

### முச்சந்தி முரளி



புதுவருஷத்தோடை சச்சரவுகள் ஒஞ்சால் எல்லாருக்கும் நல்லதுதானே பாருங்கோ...! ஆனல் இஞ்சை எங்கடை பக்கங்களிலை......?

## நேற்று ஷெல் வீச்சு!

பளை அரசர்கேணி, செந்தில் நகர்ப் பகுதிகளில் நேற்றுக் காலை தொடக்கம் ஷெல் வீச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தொடர்ச்சியான ஷெல் வீச்சுக் காரணமாக இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டனர்,

சேத விவரம் தெரியவரவில்லை. [ஓ-117]

## புத்தூரில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

நேற்று புத்தூர் அமைதிப் படை முகாமுக்கு அருகில் உள்ள பகுதியில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இதனை அடுத்து புத்தூர் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ-9)

## ரயில் சேவைகளைக் குறைக்க திணைக்களம் முடிவு

தற்போது நடத்தப்படும் ரயில் சேவைகளைக் குறைக்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்துள்ளது.

செலவீனத்தைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயணிகளுக்கு கஷ்டம் ஏற்படாத விதத்தில் ரயில் சேவைக் குறைப்பு இடம் பெறும் என்று ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் திரு. டி. சி. வெல்வல தெரிவித்தார். (உ-எ)

# ஜே. வி. பி. அமைதி வழிக்குத் திரும்பினாலேயே இந்தியப் படையைத் திருப்பி அனுப்ப முடியும்

## வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல் 2

ஜே. வி. பி. யினர் மீண்டும் அமைதி வழிக்குத் திரும்பினால்தான் இந்திய அமைதிப் படையினரை இலங்கையை விட்டு வெளியேற்ற முடியும்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத்துறை துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன இப்படிச் சொன்னார்.

சிங்களப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட ஜே. வி.பி.யினர் ஒத்துழைத்தால் மட்டுமே இலங்கை இராணுவத்தினரை தமிழர் மாகாணத்துக்கு அனுப்பி வைக்க முடியும்.

அப்போதுதான் இந்திய அமைதிப் படையினரை தாயகம் அனுப்புவதை விரைவு படுத்தவும் முடியும்.

-இப்படி அமைச்சர் விஜேரத்ன சொன்னார். (உ-எ)

## இருபாலையில் தேடுதல்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 2

இருபாலையின் ஒரு சில பகுதிகளில் நேற்றுக் காலை இந்திய அமைதிப்படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு பொதுமக்களை குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஒ-10-72)

## அரபாத்துக்கு ஈரோஸ் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

பலஸ்தீனத்தின் முதலாவது ஜனாதிபதியாகத் தெரிவான யாசீர் அரபாத்துக்கு ஈரோஸ் அமைப்பு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ஈரோஸ் இயக்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு.வி. பாலகுமாரன், ஜனாதிபதி அரபாத்துக்குத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பலஸ்தீனத்தை நீங்கள் மீட்டெடுத்ததை புதிய உலகின், சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முன்னேற்றக் காலடியாக ஈழவர்கள் நம்புகிறார்கள் (அ)

## சிறிமாவோ ஈராக் பயணம்

கொழும்பு, ஏப்ரல் 2

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஈராக் பயணமானார்.

பக்தாத் அரசின் அழைப்பை ஏற்று சென்றுள்ள திருமதி பண்டாரநாயக்கா, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார். (உ-எ)

## யாழ்தேவி ரயில் பழுது; தாமதம்

வட்டக்கச்சி, ஏப்ரல் 2

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுக்காலை புறப்பட்ட யாழ் தேவி கிளிநொச்சியில் ஒன்றரை மணித்தியாலம் தாமதித்தே சென்றது.

கிளிநொச்சியை அண்மித்துக் கொண்டிருந்தபோது ரயிலின் ஒரு பெட்டியின் சில் ஒன்றில் பழுது ஏற்பட்டது.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டு, அங்கு அந்தப் பெட்டி கழற்றி விடப்பட்டதன் பின்னர்- ஒன்றரை மணித்தியாலத் தாமதத்துடன் - கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது. (ஒ-163)

## கடமை நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

யாழ். பிரதம தபால் அலுவலகத்தின் கடமை நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து தபாற் பொதிகளை வாரத்தில் ஆறுநாட்களும் வவுனியாவுக்கு அனுப்பும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கு வசதியாக ஊழியர்களின் கடமை நேரம் மாற்றப் பட்டுள்ளதுடன், அலுவலக நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## மூவர் குத்திக்கொலை

மாத்தறை மாவட்டத்தில் மொரவாக்க என்னுமிடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர்.

## வானொலி சாதனம் தென்பகுதியில் மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 2

தென் பகுதித் தீவிரவாதிகளிடமிருந்து வானொலித் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றை இலங்கை ஆயுதப் படையினர் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

இச் சாதனத்தைப் பயன்படுத்தியே தீவிரவாதிகள் தென் பகுதியில் ஒலிபரப்புக்களைக் காலத்துக்குக் காலம் நடத்தி வந்தனர் என்று அறிவிக்கப் பட்டது (உ-எ)

## வரட்சியின் மத்தியிலும் முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து 1,225 ஏக்கருக்குத் தண்ணீர்

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 2

வரட்சியின் மத்தியிலும், முத்துஐயன்கட்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு நேற்று சனிக்கிழமை முதல் நீர்விநியோகம் ஆரம்பமாகியுள்ளது.

குளத்தில் தற்பொழுது 11 அடி தண்ணீர் மட்டுமே இருப்பதால் அதனைக் கொண்டு மூன்றுமாத காலத்திற்கு மேற்படாத உப-உணவுப் பயிர்களை மட்டுமே செய்கைபண்ணலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலது கரைப் பகுதி விவசாயிகள் சுழற்சி முறையை அடிப்படையாகக்கொண்டும் இடதுகரை விவசாயிகள் ஈவு முறையைக் கொண்டும் மொத்தம் ஆயிரத்து 225 ஏக்கர்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ளனர். (ஓ-113)

## தெற்கில் 3 மாதங்களில் 750 தீவிரவாதிகள் கைது!

கொழும்பு, ஏப்ரல் 2

கடந்த மூன்று மாதங்களில் தென்பகுதியில் 750 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெருமளவு ஆயுதங்களும் படையினரால் கைப்பற்றப்பட்டன.

இத்தகவல்களைக் கொழும்பில் கூட்டு ஆயுதப் படை தலைமை அலுவலகப் பேச்சாளர் ஒருவர் செய்தியாளரிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார். (ஓ-எ)

## இந்திய - இலங்கை விமான கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்ரல் 2

இந்திய - இலங்கை விமானக் கட்டணங்களை இந்தியன் எயர் லைன்ஸும் எயர் லங்காவும் நேற்று முதல் அதிகரித்துள்ளன.

இதன்படி கொழும்புக்கும் சென்னைக்கும் இடையே புதிய கட்டணமாக 2 ஆயிரம் ரூபா அறவிடப்படும். முன்னர் ஆயிரத்து 865 ரூபாவே அறவிடப் பட்டு வந்தது.

கொழும்பு-திருச்சிகட்டணம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில மீனவர் மோதல்; இப்போது நிலைமை கட்டுப்பாட்டில்

நெடுந்தீவு, ஏப்ரல் 2

நெடுந்தீவு வெல்லையிலுள்ள உள்ளூர் மீனவர்களுக்கும் மயிலிட்டியைச் சேர்ந்த மீனவர்களுக்குமிடையில் கைகலப்பு இடம்பெற்றது. இக்கைகலப்பில் படுகாயமுற்று நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவரான வயோதிபர் மயிலு எனப்படும் சேவியர் மரணமானார்.

காயமுற்ற பலர் யாழ் ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து வெளியூர் மீனவர்கள் உடன

(6 ஆம் பக்கம் பார்க்க)

கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம்
பிரதி செய்ய நாடுங்கள்!
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

C. G. 125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பிராசா 'பவுர்ணமி' புதிய செம்மணி றோட், கல்வியங்காடு. (10453)

ஷெப்பர்ட் அல்சேஷன் ஆண் 5 கிழமை விற்பனைக்கு உண்டு. (B) பன்டம் கோழிக் குஞ்சுகள் (B) பன்டம் அடை வைக்கும் முட்டைகள் எந்நாளும் விற்பனைக்கு உண்டு. 249, பலாலி றோட், கந்தர்மடம். (10458)

நல்ல நிலையில் உள்ள நாய்க் கூடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 47, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [10247]

National Video Deck, Portable, NV 180, புதியதும், பாவித்ததும் விற்பனைக்கு உண்டு. மற்றும் National NV- 100,1000 Watts வீடியோ லைற், சகலவிதமான Video-Heads, KV. 2090, Sony TV Silver 100 W 2 in 1 ஆகியனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: எவர்விஷன், 21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [ |2121]

ஹைப்பெக்கோ முட்டையிடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. எ. பா. உமாபதி, மீனாட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (10459)

தனி வெள்ளை, மஞ்சள் Love Birds உடன் விற்பனைக்குண்டு. 12, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (10240)

### இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். (10728)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (10251|

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Hyline அமெரிக்கன் கறுப்பு ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் 2- 4-89ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். 112, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [10248]

### கழிவு இரும்பு

பழைய கழிவு இரும்பு மொத்தமாக வாங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரடியாக தொடர்புகொள்ளவும். தவம் ஸ்ரோர்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி யாழ்ப்பாணம். [10231]

### கோழிக் குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre, Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Hy line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (10252)

### கோழி குஞ்சு விநியோகம் Uplands Farm

(Cobb) புறொயிலர் குஞ்சு [Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல்குஞ்சு 5ஆம்திகதி புதன்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10244]

### தேவை

எமது நிறுவனத்தில் கடமை புரிவதற்கு ஒரு ஓய்வுபெற்ற வைத்தியர் (M.B.B.S. Cey.) அல்லது ஓய்வுபெற்ற R.M.P. உடன் தேவை. புதன்கிழமை 5. 4. 89 க்கு முன் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்: சிற்றி மெடி கொம்பிளக்ஸ் பிரதான வீதி, மானிப்பாய். (10462)

பாலர் வகுப்பிலிருந்து O/L A/L வரை தங்களால் இயன்ற பாடங்களை கற்பிக்கக்கூடிய அநுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். காலை 6.00— 9.00 இற்குள் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. [10749]

கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு கணக்குகள் எழுதுவதற்கு நல்ல தமிழ் எழுத்துடையவர் தேவை. தொடர்பு கொள்ளவும்: இல. 40 C/o உதயன். [10214]

யாழ் - கண்டி வீதியில் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வீடும் காணியும் அல்லது காணி மட்டும் நல்ல தண்ணீர் வசதியுடன் உடன் தேவை. கடிதமூலமாகவோ/ நேரிலோ தொடர்பு கொள்ளவும் 5, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். நேரில் ஞாயிறு 9. 00 – 1. 00, திங்கள் 10.00- 2. 00. [10249]

மேசனும் உதவியாட்களும் உடன் தேவை. திருநெல்வேலியிலும் யாழ்நகரிலும் உடன் வேலை உண்டு. பொருத்தத்திலும் வேலை கொடுக்கப்படும். தங்கி வேலைசெய்ய வசதியுண்டு. தொடர்பு:- 5, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். ஞாயிறு 9. 00 - 1. 00 மணிவரை, திங்கள் 10. 00 – 2. 00 மணி வரை. [10250]

தட்டச்சு இயந்திர ஸ்தாபனத்துக்கு தட்டச்சு இயந்திரங்கள் திருத்திப் பழக விரும்பும் 17 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில். தொடர்பு: Fudo Enterprises, 39/17. Power House Road, 3rd Lane, Jaffna [சாமி அன் கோ. அருகாமையில்) [52]

பாவித்த பாவிக்கமுடியாத விகுடைசர்கள், Jarகள் மோட்டார்கள் மின்விசிறிகள், ஸ்ராட்டர்கள், Fridges, மின் உபகரணங்கள் தேவை. Omega, Manipay Road, Jaffna. (10456)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் நல்ல உயர்குல வேளாள குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய 27 வயதுடைய பெண்ணுக்கு நற்குணமுள்ள மணமகன் தேவை. வீடு, நகை, பணம் சீதனமாகக் கொடுக்கப்படும். 472 C/o உதயன். [10455]

### மணப்பெண்கள் தேவை

பதவியில் உள்ள உயர்குல மணமகன்மார் மூவருக்கு 32 வயதிற்குக்கூடிய படித்த சைவ வேளாண் மணப்பெண்கள் மூவர் தேவை. C/o 467, உதயன். (10722)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

### கல்வி

G. C.E. O/L லில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 22வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் இன்று முதல் வீடுகளிற் சென்று விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. [10750]

### கல்வி

தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து அலுவலக நடைமுறைகள் கணக்கியல், ஆங்கிலம் கதைத்தல், வாசித்தல், எழுதுதல்S.T.C.A 149 (37), சிவன்பண்ணை வீதி. கொட்டடி, யாழ்ப்பாணம். 1977இல் நிறுவப்பட்டது. அரசினாலும் லண்டன் பிற்மன் நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. (10452)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### இடமாற்றம்

K. K. S வீதியில் அமைந்திருந்த சிறிலங்கா சலவைத் தொழிலகம் தற்போது சுன்னாகம் வாழைக்குலைச் சந்தை முன்பாக இடமாற்றம் அடைந்துள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். நடராசா. (10724)

### எவர்சில்வர் தயாரிப்புகள்

எங்கும் கிடைக்கின்றன. Rajz Brand எவர் சில்வர் தயாரிப்புக்கள் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமதி. தலைமுறை தலைமுறையாக நிலைத்து நின்று பயன் தருபவை Rajz Brand Tea set, Dinner set (round), dinner set (Oval), Boiler Hot plate, Lunch boxes, Lunch carriers, Cooking pans Thookuchaddies, Office Table Tray with pen holders இன்னும் பற்பல. காட்சி அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C/1909)

## A/L 91

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

**விலங்கியல்**
Sat - Sun 7. 00a.m
By
திரு. கெங்கா

**தாவரவியல்**
Sat, Sun 1. 30 p m
By
திரு. பாலா

(C/2108)

### மணமகள் தேவை

இந்து வேளாள (28 வயது) டாக்டர் (M. B. B. S. - Colombo) க்கு 27 வயதுக்குட்பட்ட டாக்டர் மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: 473 C/o உதயன், யாழ்ப்பாணம். [10460]

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தில் Licence கவரினுள் சில பொருள்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K. நாகராசா, 710, சிவலிங்கப்புளியடி தேனீர் கடை யாழ்ப்பாணத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (10461)

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 2—4—89 சனி / ஞாயிறு நாட்களில் நேரம் பிற்பகல் 4-30— 6 மணிவரை S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (10222)

## A/L 91

பொருளியல்


உதயன்

ஆரம்பம்: 3- 4- 1989
திங்கள்: 5.00 p.m

பெரடெனியா இன்ஸ்ரிரியூட், கொக்குவில்.

(C/ 2117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### மாப்பாணசிங்கம் சண்முகவடிவேல்

தோற்றம்: 07-03-1928 மறைவு: 03-03-1989

#### திதி நிருணயவெண்பா

நேரார் விபவத்தே நின்ற மதிமாசி
ஏரா ரபரத்தே காதசியில் — சீர்ச்சண்
முகவடிவேல் முன்னேன் முருகன் அடிக்கீழ்
அகநெகவே சென்றான் அறை

எங்கள் குடும்பத் தலைவனும்,

ஓய்வு பெற்ற ஆசிரியரும், செக்கோசிலவக்கியத் தூதரகத்தில் உள்நாட்டு விவகார அலுவலராகக் கடமையாற்றியவருமாகிய மா. சண்முகவடிவேல் அவர்களின் அந்தியேட்டியும், வீட்டுக்கிருத்தியமும் இன்று [02-04–1989] நிகழ்வுறுகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் மறைவின் பொழுது பலவகையில் உதவி புரிந்த அனைவருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் பங்குபற்றியோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, தாய்,
உடன்பிறந்தோர்,
மக்கள், மருகர்,
பேரர், பேர்த்தியர்.
உறவினர்.

(10448)

## இடமாற்றம்பெற்ற ஆசிரியருக்கு பாடசாலைகள் தெரிவு

### கல்வித்திணைக்களத்தில்பணிஆரம்பம்

வேறு மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலைகளை தெரிந்து ஒதுக்கும் பணிகள் யாழ் கல்வித் திணைக்களத்தில்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

வெளி மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள 347 பேரின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்ற நியமனங்கள் நேற்று முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

### சாவகச்சேரி

## உதயன் - சஞ்சீவி வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி!

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை உங்கள் வீடுகளில் காலையிலேயே நேரில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ஜே. எஸ். ரி. ஸ்ரேஷனறி**
இல. 15, கண்டி வீதி,
(நீதிமன்றத்துக்கு முன்பாக)
சாவகச்சேரி.

## NEW SCIENCE ACADEMY

B M. C. முன்பாக — JAFFNA.

### 89 A/L DAY CLASS

சடப் பொருளியல்
Mr. மணியம் B. Sc (Hons)

ஆரம்பம்: 03-04-89

Mon — 7. 00 a.m.
Mon, Wed, Fri — 7. 00 a.m.

[C-2125]

வெளிவந்துவிட்டது!

சித்திரை மாத

## ★ உள்ளம் ★

(மாத சஞ்சிகை)

சகல புத்தக விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

– வளர்மதி வெளியீடு

[10253]

## 4 ஆம் வருட நினைவு அஞ்சலி



### திருமதி தவமணி சக்திவடிவேல்

தோற்றம்: 17 - 04 - 1956 மறைவு: 17 - 03 - 1985

திதி: 03 - 04 - 1989

அணையாத பேரொளியே
ஒளி வீசும் மணி விளக்கே
இதயத்தை இடி தாக்க
எமை விட்டகன்றதேன்
விழியோரம் பனித்துளியாய்
விழி நீரும் உகுத்திடவே
மலரான உன்பாத
மலரடியை அஞ்சலித்தோம்
ஓம் சாந்தி!

என்றும் உன் நினைவுடன்:
கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மாமி, மச்சாள்மார், மச்சான்மார்,
உறவினர்கள்.

சரஸ்வதி மகால்,
கோணாவலை,
வசாவிளான்.

[53]

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## கேள்வி அறிவித்தல்-1989

எமது 27 - 10 - 88, 26 - 12 – 88, 02 - 03 - 89 ஆம் திகதிய அறிவித்தல்களைத் தொடர்ந்து கீழ்க்காணும் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடை ஆகிவற்றிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 10-4-89 திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். குத்தகைக்கான காலம் 18-4-89ஆம் தொடக்கம் 31-12-89 வரையினதாகும். விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் விசேட ஆணையாளரினால் கேள்விப்பத்திரப்பணம், கேள்வி வைப்புப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 07-04-89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். ஏனைய விபரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 17-3-89.

| | குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஆட்டிறைச்சிக்கடை சு. மீன்சந்தை | 100/- | 500/- | 55000/- |
| 2. | கருவாட்டுக்கடை இல. 3. | 25/- | 100/- | 1350/- |
| 3. | கருவாட்டுக்கடை இல. 5. | 25/- | 100/- | 1500/- |
| 4. | கருவாட்டுக்கடை இல. 7. | 25/- | 100/- | 1500/- |

[C-2122]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலும் பாடசாலைகளை மூடுவதா?

## பொருத்தமற்றது என்று கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

தென்பகுதி வன்செயல்களைக் காரணம் காட்டி வடக்கு கிழக்குப் பகுதி பாடசாலைகளை மூடுவது பொருத்தமற்ற செயலாகும்.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நாளாந்தம் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளாலும் குழப்பங்களாலும் பல பாடசாலைகள் அடிக்கடி மூடப்படுகின்றன. அது போதாது என்று தென்பகுதி வன்செயல்களைக் காரணம் காட்டி தமிழ்ப்பகுதிப் பாடசாலைகளை மூடுவதா?

கடந்த முறையும் தென்பகுதிக் கலவரங்களைக்காரணம் காட்டி பாடசாலைகள் மூடப்பட்டபோதும், கல்வித்திணைக்கள அதிகாரிகளின் முயற்சியினால் எமது பகுதிப் பாடசாலைகள் இயங்கின.

இந்தத் தடவையும் உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வடக்குக் கிழக்குப் பகுதிப் பாடசாலைகளை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர் கருத்துத் தெரிவித்தார். (ஒ-5)

# பாக்குநீரிணையில் மீன் பிடிக்கத் தடை!

வல்வெட்டித்துறை, ஏப் 2

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உட்பட்ட பாக்கு நீரிணைக் கடலில் நேற்று முதல் மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இத் தடை உத்தரவு மறு அறிவித்தல் வரை அமுலிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர் சங்க வட்டாரங்கள் இத்தகவலை ஊர்ஜிதம் செய்தன.

பலவித பாதிப்புகளின் பின்னர் தமது தொழிலைச் சீர் செய்வதற்கு இப்போது ஏற்பாடு செய்துவரும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று அந்த வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (ஒ-160)

# களஞ்சியத்தில் பொருள் இல்லை

வட்டக்கச்சி ஏப். 2

கிளிநொச்சி மாவட்டத்திற்கென தனியாக உள்ள களஞ்சியத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக போதிய உணவுப் பொருள்கள் இல்லை.

இதன் காரணத்தால் பொதுமக்களுக்கு கூட்டுறவுக் கடைகள் மூலம் மார்ச் மாதத்தில் வழங்கப்பட வேண்டிய உணவு முத்திரைப் பொருள்கள் அரைவாசியாக வழங்கப்பட்டன. (க- 163)

# கிளிநொச்சி 135 பேருக்கு இடமாற்றம்!

வட்டக்கச்சி, ஏப்ரல் 2

கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரிந்த 135 ஆசிரியர்கள் உடனடியாக வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் வெளி மாவட்டங்களிலிருந்து 9 ஆசிரியர்கள் மட்டுமே இந்த மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்ற உத்தரவை ஆட்சேபித்து வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுக்கு கிளிநொச்சி மாவட்ட மாகாண சபை உறுப்பினர் திரு. பி. இராசரத்தினம் அவசர தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-163)


**MODERN EDUCATION CENTRE**

KARAVEDDY

பெற்றோரின் வேண்டுகோளுக்கிணங்க
Science Centre இல்
ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 ஆரம்பமாகிறது.

ஆரம்பம்: 03-04-1989

திங்கள் பி. ப. 3 மணி

(10446)



**இந்திய யாத்திரை-சுற்றுலா!**

நடைபெறும் திகதி:
18 - 4 - 89 முதல் 06 - 05 - 89 வரை
சித்திரைப் பூரணையில்
கன்னியாகுமரியில் தீர்த்தமாடல்

முந்துங்கள் இடத்திற்கு -----
ஒரு சில ஆசனங்களே உண்டு -----!

திருச்சி, மதுரை, மட்ரூஸ், பெங்களூர், மைசூர், சிதம்பரம், நாகூர், திருப்பதி, கொடைக்கானல், ஊட்டி, அன்னைவேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள புகழ்வாய்ந்த தலங்களைத் தரிசிக்கவும் ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கவும், பகவானைச் சந்திக்கவும்,

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தலைமைப் பணிமனை:

**துர்க்கா ரூர்ஸ்,**
6, நவீனசந்தை மேல்மாடி,
மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

ஆலோசனைக் கிளைகள்:

- திரு. எஸ். இராமலிங்கம் (ஆசிரியர்) கொழும்பு ஸ்ரோர்ஸ் - பளை.
- திரு க. கருணாரத்தினம், வூட்லண்ஸ் டி ஹோட்டல், கண்டி வீதி, கிளிநொச்சி
- Dr. மகாலிங்கம், அரவிந் பார்மஸி, கண்டி வீதி. மாங்குளம்
- திரு. பெ. அழகு, 64, இராஜசோதி கபே, கண்டி வீதி, வவுனியா.
- நியூறெயின்போ றவல்ஸ், இல.157/4, சிறீ கதிரேசன் வீதி, கொழும்பு-13

(C/2114)


# மண்டைதீவில் பெரும் அளவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

மண்டைதீவு, ஏப்ரல் 2

மண்டைதீவுப்பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இப் பகுதியிலுள்ள குடிதண்ணீர் கிணறு எல்லாம் வற்றிவிட்டன.

குறிப்பாக கரையோரப்பகுதி மீனவ குடும்பங்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

கால் நடைகள் குடி தண்ணீர் இல்லாது தினமும் இறந்த வண்ணம் இருக்கின்றன.

டிராக்டர் மூலம் தினமும் இப்பகுதி மக்களுக்கு இலவசமாக குடி தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து உதவுமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சடாட்சரசண்முகதாசிடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். (க-88)

# வானொலி கலைஞரின் அலவன்ஸ் அதிகரிப்பு

கொழும்பு, ஏப் 2

வானொலியில் நிகழ்ச்சிகளை வழங்கும் கலைஞர்களுக்கான அலவன்ஸ் அதிகரிக்கப்படும் என தகவல் துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார்.

ஒலிபரப்பப்படும் பாடல்களை எழுதியவருக்கும் அப் பாடல்களுக்கும் வழங்கப்படும் சன்மானமும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (க-எ)

# மயானத்தில் மூன்றில் ஒரு பகுதி கிறிஸ்தவ மக்கள் பாவனைக்கு

## கரைச்சி மயான அபி.சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

சங்கானை கரைச்சி (வழுக்கையாறு) மயானத்தின் மூன்றில் ஒரு பகுதியை கிறிஸ்தவ மக்களின் பாவனைக்கு ஒதுக்கி இந்துமயானப் பகுதிக்கு எல்லைகள் அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் வழுக்கையாறு மயான அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்து.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ யாழ். அரசாங்க அதிபரால் ஒதுக்கப்பட்ட ரூபா 25,000யை மயான மடத்தில் உடைந்து போயிருக்கும் ஓடுகளை மாற்றவும், தங்கும் இடங்களைத் திருத்தவும் உபயோகித்தல்.

★ இச் சபையின் ஆயுள் அங்கத்தவர்களாகச் சேருபவர்கள் சந்தாவாக ரூபா 150 செலுத்தவேண்டும்.

இப் பணத்தை அங்கத்தவர்கள் மூன்று தவணைகளில் கட்டலாம்.

★ திரு. மு. சச்சிதானந்தம் தனது தாயாரின் பெயரில் அமைக்கவிருக்கும் வைரவர் கோயிலை முறைப்படி அமைக்க உதவி செய்தல்.

★ மயானத்தில் இடிந்து தூர்ந்து போயிருக்கும் கிணற்றை புனர்வாழ்வு நிதியிலிருந்து திருத்தம் செய்தல்.

★ இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. நா. கதிரேசுவை மயான காப்பாளராக நியமித்தல்.

# ஆடு செய்த குற்றத்துக்கு தண்டம் ரூபா 240/-

அச்சுவேலி, ஏப்ரல் 2

விளைபொருளை உண்டு சேதப்படுத்தியதாகக் கூறப்படும் ஆட்டுச் சொந்தக்காரருக்கு விதிக்கப்பட்ட தண்டம் விளைபொருளை உண்ட ஆட்டின் பெறுமதியிலும் அதிகமாம்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெங்காயப் பிடியில் உள்ள வெங்காயத்தை ஆடு தின்று சேதப்படுத்தியது. ஆட்டைப் பிடித்து கட்டாக்காலி கால் நடை சேத மதிப்பீட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சேத மதிப்பீட்டுக் குழுவினால் வெங்காயத்தைத் உண்ட ஆட்டின் உரிமையாளருக்கு ரூபா 240 தண்டமாக விதிக்கப்பட்டது.

இச்சம்பவம் அச்சுவேலி தெற்கில் இடம் பெற்றது. (ஒ-11)

# வாழ்க்கைத் தவறுகளைத் திருத்த மைதான அனுபவங்கள் உதவும்

## மெய்வல்லுநர் போட்டியில் பேச்சு

மானிப்பாய், ஏப். 02

மைதானத்தில் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் வாழ்க்கையில் நாம் விடும் தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் சமூகத்தில் நல்ல பிரஜையாக வாழவும் வழி சமைக்கின்றன. வகுப்பறையில் பெற்றுக் கொள்ளும் கல்வியை விட மைதானத்தில் பெற்றுக் கொள்ளும் அனுபவ அறிவானது பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்காமல் உறுதியுடன் செயல்பட உதவும்.

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல மெய் வல்லுனர் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உடற் கல்வி அதிகாரி திரு. சு அருணகிரிராசா மேற்கண்டவாறு கூறினார்.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றன. மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் தனது தலைமையுரையில் மாணவர்களுக்கு வேண்டிய விளையாட்டு உபகரணங்களையும் உடற்கல்வி ஆசிரியரையும் பெற்றுத் தருமாறு உடற் கல்வி ஆதிகாரியைக் கேட்டுக்கொண்டார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளையும் சான்றிதழ்களையும் திரு. அருணகிரிராசா வழங்கினார்.

போட்டிகளின் முடிவில் 179 புள்ளிகளைப் பெற்று விபுலானந்தர் இல்லம் முதலாம் இடத்தையும், 143 புள்ளிகள் பெற்று நாவலர் இல்லம் இரண்டாம் இடத்தையும், 129 புள்ளிகள் பெற்று மூன்றும் இடத்தை ஞானப்பிரகாசர் இல்லமும் பெற்று வெற்றியீட்டின. [இ'90

# பூநகரியில் இராணுவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப் 2

பூநகரி, வாடியடியில் பெருந்தெருக்கள் திணைக்கள அலுவலகத்துக்குச் சமீபமாக இந்திய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தபால் நிலைய வேலைகள் பூர்த்தி

கிளிநொச்சி ஏப்ரல் 2

கிளிநொச்சி, பரந்தன் தபால் நிலையங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி அளிக்கின்றன.

முன்னர் இலங்கை இராணுவ நடவடிக்கைகளின் போது இக் கட்டடங்கள் பாரிய சேதங்களுக்கு உள்ளாயின.

இந்த திருத்த வேலைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபரின் நிதி ஒதுக்கீட்டில் கட்டடத் திணைக்களம் மேற்கொண்டது (ச- ரி)

# துரித கதியில் நடைபெறுகிறது

வவுனியா ஏப்ரல் 2

வவுனியாவில் நடைபெற்று வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையடுத்து சுமார் இரண்டாயிரம் இறப்புப் பதிவுப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகிறது.

குவிந்துகிடக்கும் இவ் அவசர வேலைகளை முடிப்பதற்குப் போதிய எழுதுவினைஞர்கள் இல்லாமல் இருந்தபோதிலும் அரசாங்க அதிபரின் அனுமதியுடன் கச்சேரியின் வேறு கிளை அலுவலகங்களில் இருந்து ஊழியர்களைப் பெற்று [illegible] கள் நடைபெற்று வருகிறது. (ச-1[illegible])

# கல்வியில் எமது மாணவர்களின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

## திருஇருதயக் கல்லூரி அதிபர் பாராட்டு

கரவெட்டி, ஏப்பிரல். 2

'கடந்த ஆறு ஆண்டுகளாக எமது பிரதேசத்தில் சிரற்ற நிலைமை ஒன்று இருந்து வருகிறது. எனினும் எமது மாணவர்கள் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளனர்.

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. சின்னப்பு வின்சன் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் தொடர்ந்து பேசுகையில், ஜீ.சி.ஈ (சாதாரணம்) பரீட்சையில் எமது கல்லூரியின் 55 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஜீ.சி.ஈ (உயர்தரம்) பரீட்சையில் இருவர் பல்கலைக் கழகம் புகும் தகுதியைப் பெற்றுள்ளனர். இருவர் யாழ் மாவட்டத்திலேயே மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்றனர்,'' என்று கூறினார்.

கரவெட்டி பங்குத்தந்தை வண. பிதா. ஜெரோ செல்வநாயகம் அடிகள், கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் [illegible] திரு. [illegible] அனந்தராஜா, வடமராட்சி [illegible] அதிபர் திரு. ஏ. [illegible] சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள். க-70)

# கண்டாவளை வைத்திய விடுதி

கிளிநொச்சி ஏப்ரல் 2

கண்டாவளை அரசினர் வைத்தியசாலை விடுதி தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தண்ணீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு நீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்பட்ட செலவான ரூபா 30,000ஐ கச்சேரி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ச-ரி]

# கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப் 2

ஆறுகால்மடத்தடியில் உள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை அண்மையில் கொள்ளையிடப்பட்டது.

நல்லூர் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் பிரம்படிக் கிளை கொள்ளையடிக்கப்பட்டது பற்றிய செய்தி ஏற்கனவே வெளிவந்தது தெரிந்ததே. (ஒ-10)

# பதற்றம் ஏற்படுத்திய விசர் நாய்

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்குள் திடீரென புகுந்த விசர் நாய் ஒன்று அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியது.

எங்கிருந்தோ வந்த விசர் நாய் வைத்தியசாலை வளவுக்குள் புகுந்து ஓடித்திரியவே அங்கு சிகிச்சைக்கு வந்திருந்த நோயாளர்களும், ஊழியர்களும் பதற்றம் அடைந்தனர்.

குறிப்பிட்ட விசர் நாய், வைத்தியசாலை பகுதியில் அகப்பட்டவர்களைக் கடிப்பதிலும் ஈடுபட்டதால் அங்கு நின்ற 5 பேர்கள் காயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

அந்நாய் பின்னர் அடித்துச் கொல்லப்பட்டது. (ஒ-68)

# பாராட்டு

கோப்பாய், ஏப்ரல் 2

கோப்பாய் உப அபிவிருத்தி சபை அலுவலக நிர்வாகப் பகுதியில் அமைந்திருக்கும் சகல தெரு மின் விளக்குகளையும் சீர் செய்து ஒளி பெறச் செய்ததற்குஇப் பகுதி மக்கள் மின் அத்தியட்சகரை பாராட்டுகின்றனர். (க72-[


முதலாவது

**பிறந்தநாள் வாழ்த்து**



**செல்வன் பிரஷாந்த்**

ரவி பெலிசியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரஷாந்த் இன்று (2-4-89) தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை மம்மி, டடி, கிரிஷாந்த் அண்ணா, பப்பா, மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அன்டிமார், மாமாமார், மாமிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

26/3 ஸ்ரேசன் வீதி,
புங்கன்குளம். (10443)



**தமிழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி**

நாம் மேற்கு ஜேர்மனியில் புதுமை படைத்துள்ளோம். தமிழ் எழுத்துக்களை கொம்பியூட்டர்கள் மூலம் எப்படிப் பாவிப்பது என்று. எழுத்துக்களைப் பல விதங்களிலும், முறைகளிலும் பாவிக்கலாம். தமிழ் எழுத்துக்களைக் கொம்பியூட்டர் மூலம் எப்படிப் பாவிப்பது என்பது பல நன்மைகளைப் பத்திரிகையாளர்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் மற்றும் பல நிறுவனங்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும். தமது அச்சு வேலைகளைத் தாமே சிறப்பாகவும் மலிவாகவும், விரைவாகவும் செய்து கொள்வதற்கும், தமிழ் புத்தகங்களைப் படங்களுடனும் அச்சடிக்கக் கூடியதாகவும் செய்து தருவோம். மேற்கொண்டு விபரங்களுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**KARL SCHULER PUBLISHIN.,**
Untere Bachstr · 38,
D - 7470 Albstadt 2,
West Germany.

(10238)



**அறிவித்தல்**

**ஹோம் பினன்ஸ் லிமிடெட்**

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்திற்கு பணம் செலுத்தவேண்டியுள்ள அனைவரும் அவற்றை

**ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்,**
**3ஆம் மாடி, இல. 463, காலிவீதி, கொழும்பு 3**

என்ற விலாசத்திற்கு காசோலையாகவோ, ரொக்கமாகவோ நேரடியாகச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காசோலைகள் 'ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்' என்ற பெயருக்கு எழுதப்பட்டு 'ACCOUNT PAYEE ONLY' எனக் கோடிடப்படல்வேண்டும்.

**ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்டுக்காக**
முகாமையாளர்
ஸ்ரீலங்கா மேர்ச்சன்ட் வங்கி லிமிட்டெட்.

10447)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலையிலிருந்து இடைநடுவில் விலகுவோரில் பெண்களே அதிகம்

## மகளிர் அபிவிருத்தி நிலைய கலைவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப்ரல்.2
இலங்கையில் பாடசாலைகளில் இருந்து இடையில் விலகுவோரில் அதிகமானோர் பெண்களாகவே இருக்கின்றனர். இவ்வாறு இடைவிலகும் பெண்கள் சமையல் பணியிலேயே தமது முழுமையான நேரத்தை செலவிடுகின்றனர்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய கலைவிழா கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரைநிகழ்த்தினார்.

8ஆவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியாவில் அமுல் நடத்தப்படவுள்ளது. இந்தத் திட்டம் உணவுத் துறை — விவசாயத்துறையின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறான திட்டங்களின் மூலம் சமையல்துறையில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் வேலை நேரத்தை குறைக்க முடியும்.

சமையல் துறையில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் வேலை நேரம் குறைவடைந்தால்தான் அவர்களை சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்த முடியும்.

இப்படி அவர் கூறினார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் உரை நிகழ்த்துகையில் பெண்களும் அபிவிருத்தியும் என்ற விடயம் அண்மைக் காலமாக முக்கியத்துவம் அடைந்துவருகின்றது. இது பற்றிய பொருளாதார கழக ஆய்வுகள் தற்பொழுதுமேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக பொருளாதார கலாசார அபிவிருத்தி முன்னேற்றத்தில் பெண்களுக்கு உள்ள தடையை பிரச்சினைகளை எமது சமூகத்தில் இருந்து தெளிவாக அறிந்து கொண்டு அவற்றை மாற்றுவதற்கான ஒழுங்குகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிகள் பற்றி திருமதி சரோஜா சிவச்சந்திரன் உரைநிகழ்த்தினார்.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ-5)

# கூரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி பரிசளிப்பு விழா

நல்லூர் மக்கள் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும், இணைந்து நடத்திய ஆறு பேர் கொண்ட ''நொக் அவுட்'' சரபந்தாட்ட சுற்றுப் போட்டியில் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 2-0 ஆட்டங்களில் தோற்கடித்து சாம்பியனானது.

பகுதி இரண்டுக்கான சுற்றுப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

மூன்றும் பகுதி சுற்றுப் போட்டி அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகத்துக்கும் சென். அன்ரனி விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்றது.

அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் சென். அன்ரனி விளையாட்டுக் கழகத்தை 2-1 ஆட்டங்களில் வெற்றிபெற்றது.

முதலாம் பகுதி சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி. கே. சண்முகலிங்கமும் 2 ஆம் பகுதிப் போட்டியில் காந்திஜி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி. தவநாதனும் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பகுதி ஒன்றில் வெற்றி பெற்ற திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா 500 ரொக்கப் பணமும் அ. மு. ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டன,

இரண்டாம் பரிசாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு ரூபா 250 ஐ நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக அதிகாரிதிரு. இரா. தணிகாசலம் வழங்கினார்.

பகுதி இரண்டில் சாம்பியனான தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்துக்கு ரூபா 250ம், வெள்ளிக் கேடயமும் விளையாட்டு அதிகாரி திரு. க ஏகாம்பரத்தினால் வழங்கப்பட்டன.

பகுதி மூன்றில் சாம்பியனான அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகப் பெண் அணிக்கு ரூபா 250 பரிசாகத் திருமதி கோமதி வழங்கினார். (ச]

# கொக்குவில் இந்து குகன் பெற்ற இரண்டாவது செஞ்சரி

யாழ்ப்பாணம் ஏப்ரல் 2
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சினேக பூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில் கொக்குவில் இந்துவைச்சேர்ந்த குகன் இரண்டாவது முறையாக ''செஞ்சரி'' யைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் இந்து அணி முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது. குகன் ஆட்டமிழக்காது116, சுதாகரன் 95 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முகுந்தன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

யாழ், மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 161 ஓட்டங்களுக்குத் தமது சகல விக்கெட்டுக்களையும்இழந்தது. றமேஷ் 46 முகுந்தன் 35 சாயிஸ் காந்தன் 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

செந்தில், பிரபாகரன் ஆகியோர் முறையே 3, 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் ஏழு விக்கெட் நஷ்டத்துக்கு181ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டிக்கு முரளிதரன் உமாகாந்தன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (ச)

# சகல இனங்களின் பிரதிநிதியாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்

## நாடாளுமன்றத்தில் வாசு

யாழ்ப்பாணம், ஏப் 2
என்னை நாட்டின் சகல இன மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இப்படி திரு. வாசுதேவ நாணயக்கரா சொன்னார்.

நாடாளுமன்றத்தில் நவசம சமாஜக் கட்சி எம். பி. வாசுதேவ நாணயக்கரா பேசுகையில் மேலும் சொன்னதாவது:

அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டுள்ள மக்களின் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன்.

சிறுபான்மை இன மக்கள், மலையகத்தோட்டத்தொழிலாளர், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம், சிங்களவர் ஆகியவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக நான் வாதாடுவேன்.

இப்படி அவர் கூறினார், (இ-ரி)

# இந்து இளைஞர் பேரவையின் மாநாட்டுக்கு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2
இந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த மாநாட்டை யொட்டி யாழ்ப்பாணத்தில் பல தரப்பட்ட சமய அறிவுப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவை செய்து வருகிறது.

அகில இலங்கையிலுமுள்ள இந்து இளைஞர் மன்றங்களிடமிருந்து இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்தி வெளியீடான ''இந்து இளைஞன்'' பத்திரிகை மூலம் இப்போட்டிகளுக்கான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் இந்து இளைஞர் மன்றங்கள் ஊடாக கோரப்பட்டுள்ளன. (க)

# கோயில் திருவிழாக்களில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,ஏப்பிரல். 2
கோயில் திருவிழாக்களில் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டுவது வழக்கமாக மாறிவருகிறது. தற்போது திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும் பல திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

கொடியேற்றத்தைக் காண வந்த ஒருபெண் தனதுஇரண்டு பவுண் சங்கிலியைப் பறிகொடுத்தார்.

இன்னொரு பெண் அர்ச்சனைக்காக காத்திருந்த வேளையில், கையில் வைத்திருந்த கைப்பை பிளேட்டினால் வெட்டப்பட்டு உள்ளே இருந்த பணப்பை அபகரிக்கப்பட்டது.

திருவிழாக் காண வருவோர் அதிக நகைகளை அணிந்து வருவதைத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-90)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. மு. பாலேந்திரா

(உதவிமுகாமையாளர், இலங்கைவங்கி யாழ்ப்பாணம்)

**மறைவு: 02 - 04 - 1986**

கடமையே கண்ணாகக் கருத்திற் கொண்டு தனக்கென்று ஒரு பயனையும் கருதாமல் பிறர்க்கு உதவும், நோக்குடன் வாழ்ந்து, மறைந்த எங்கள் பண்புள்ள குடும்பத் தலைவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

உங்களை என்றும் மறக்க முடியாத
அன்பு மனைவியும், பாசமுள்ள மக்கள்,
தாய், சகோதரர்கள்.

மேதர்ஸ் லேன்,
மானிப்பாய். [10156]

# பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு, ஏப் 2
இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 24ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப் படும்பொழுது, வேலையில்லாத பட்டதாரிகளில் ஒரு கணிசமான எண்ணிக்கையினருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப் படும்.

இவ்வாறு ஜப்பான் - இலங்கைப் பாடசாலை வைபவம் ஒன்றில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கல்வி அமைச்சர் திரு லொக்குபண்டார இதனைத் தெரிவித்தார். [ஒ-5]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராமசாமி கருணாநிதி

(யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை முன்னாள் அதிபர்)

**மண்ணகம்:** 13 - 10 - 1929 **விண்ணகம்:** 14 - 03 - 1988

**திதி: 02 - 04 - 1989**

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்.

செல்வரட்டையிட்டி,
[illegible] (C/2123)

# இறைவனது அருளை பக்தியுடன் பணிந்து பெற்றுக் கொள்ள வேண்டும்

## பொங்கல் விழாவில் உரை

சுழிபுரம், ஏப்ரல். 2
பசுவில் பால் நிறைந்திருந்தாலும் அதன் மடியிலுள்ள முலைக்காம்பு வாயிலாகவே பாலைப் பெறமுடிகின்றது. அதே போல் ஆலயத்தில் கற்பக்கிரகத்தில் ஆவாகனம் செய்யப்பட்டுள்ள இறைவனது அருளை, பக்தியுடன் பணிந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய பொங்கல் விழாவில் உரையாற்றும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் திரு. கு. பொன்னுத்துரை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திருமதி நாச்சியார் செல்வநாயகம் பேசுகையில்; மேலும் கூறியதாவது ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் பக்தியை வளர்ப்பதாக அமைய வேண்டும்.

வேண்டத் தகாதவற்றை விலத்தி நல்லவற்றைப் புகுத்துவதன் மூலம் பக்தர்கள் மத்தியில் இறைவன் [illegible] கையை வளர்க்கலாம் [illegible] கூறினார்:

# பருத்தித்துறை பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி முடிவு

தாளையடி, ஏப். 2
பருத்தித்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றியீட்டின.

17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் உடுத்துறை மகாவித்தியாலயமும், 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஸ்ட மகாவித்தியாலயமும் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பெண்கள் ஆகியோருக்கான இரு பிரிவுகளிலும் தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையும் முதலாமிடங்களைப் பெற்றன.

இப்போட்டியில் 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான பிரிவில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை 13 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியன இரண்டாமிடங்களையும் பெற்றன,

உடற்பயிற்சி போட்டியில் முதலாமிடங்களைப் பெற்ற பாடசாலைகள் எதிர்வரும் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (க- 144)

# பனை அபி.சபைக்கு புதிய லொறி

அரியாலை ஏப்ரல் 2
பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய லொறி ஒன்று கிடைத்துள்ளது.

இதனை யாழ். அரசாங்க அதிபரிடம் இருந்து பனை அபிவிருத்திச்சபைசெயலாளர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# ஆறாத மனதில் இருந்து ஓயாது வடியும் ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



## செல்வன் க. ஜெயசீலன்

(ப. நோ. கூ. சங்கம். தெல்லிப்பழை)

**மலர்வு:** 16 - 02 - 1967 **உதிர்வு:** 02 - 04 - 1988

''ஓராண்டு ஓடிவிட்டாலும்
ஓர் விநாடி ஓய்ந்ததில்லை உன் நினைவு
ஓடிந்து போன உன் கதையை
படித்துப் பார்க்க எம்மால் முடியவில்லை!
எல்லோர்க்கும் நல்லவராய் இருந்திங்கு
சேவை செய்தீர் செல்வ மகனே ஜெயசீலா!
உமைக் காணும் நாள் தான் எப்போ?
இது தானா உம் விதி''

உமது ஆன்மா சாந்தி பெற
இறைவனைத் தினமும் இறைஞ்சுகின்றோம்.

உமது இழப்பால் துவழும்:
அன்புப் பெற்றோர், சகோதர சகோதரிகள்.
அன்ரிமார், மாமன்மார், அத்தைமார்.

V. கந்தையா
வறுத்தலைவிளான்,
தெல்லிப்பழை. [10216]

# விண்ணுலக வாழ்வின் முதல் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு:** 10 - 09 - 1910

**உதிர்வு:** 02 - 04 - 1988

## திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளை

பண்பின் பிறப்பிடமாய்,பாசத்தின் உறைவிடமாய் விளங்கி, எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு எம் உயிர் உள்ள வரை நீங்காது!

உங்களது மறைவால் வாடி நின்று, உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

சுணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 12, அடப்பன் ரோட்,
குருநகர், யாழ்ப்பாணம். (10387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபி. கண்டத்தில் சுதந்திர நமீபியா; மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பு

வின்ற்ஹொக், ஏப். 1

70 ஆண்டுகளுக்கு மேலாக தென்னுபிரிக்காவினுல் ஆளப்பட்டுவந்த நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கும் வேலைகள் ஐ. நா. மேற்பார்வையில் இன்று ஆரம்பமாகின.

## கௌரவத்துடன் வெளியேறுவதாக தென் ஆபிரிக்க அரசு அறிவிப்பு

நமீபியாவின் நிர்வாகப் பொறுப்பை ஐ. நா. சார்பில் உயர் அதிகாரி ஒருவர் நேற்று ஏற்றுர்.

ஐ. நாவின் 453 தீர்மானப்படி 1990 ஏப்ரலில் நமீபியா பூரண சுதந்திரநாடாக மலரும்.

அதுவரை ஐ. நா அமைதிப் படையின் பாதுகாப்பில் நமீபியாவின் நிர்வாகம் இருக்கும்.

தென் ஆபிரிக்காவின் படைகள் வெளியேறிவிட்டன.

தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக்போத்தா இன்றுகாலை எல்லைப்புறம் ஒன்றில் வைத்து, நமீபிய அரசியல் கைதிகளின் கடைசித் தொகுதியை ஐ. நா, அமைதிப் படையிடம் ஒப்படைத்தார்.

இதைத்தொடர்ந்து நமீபிய சுதந்திரத்துக்குப் போராட்டம் நடத்திய சுவப்போ போராளி இயக்கத்துக்கும் தென் ஆபிரிக்க அரசுப்படைகளுக்கும் இடையே முறையான யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட்டது.

பின்னர் தென் ஆபிரிக்க அமைச்சர் பிக்போதா நமீபியத் தலைநகரில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினுர்.

அவர் அப்போது சொன்னதாவது;

நாம் கௌரவத்துடனும் பெருமையுடனும் நமீபியாவை விட்டு வெளியேறுகின்றோம்.

ஆபிரிக்கக் கண்டத்திலே மிகவும் வளர்ச்சி அடைந்த நாடாக நமீபியா விளங்குகிறது.

எமது நிர்வாகத்தில் நமீபியாவில் 4, 382 கிலோமீற்றர் தார்போட்ட வீதிகள் அமைக்கப்பட்டன; 2, 349 கிலோமீற்றர் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன.

60 ஆஸ்பத்திரிகள் நிர்மாணிக்கப்பட்டன. 52.5 சமமானேர் படிப்பறிவுள்ளவர்கள். 94 சதவீதமான சிறுவர் பாடசாலை செல்கின்றனர்.

இப்படி அமைச்சர் சொன்னுர்.

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமானதை மக்கள் குதுகலத்துடன் வரவேற்றனர்.

சுதந்திரபொதுத்தேர்தல் வருகிற நவம்பரில் நடைபெறும். பின்னர் அரசியல் நிர்ணயசபை புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும்.

அனைத்தும் ஐ. நா மேற்பார்வையில் இடம் பெறும்.

முதல் தடவையாக

## அமெரிக்க ஜனுதிபதி புஷ் மீது வெள்ளைமாளிகை ஊழியர் வழக்கு

### போதை பரிசோதனை உத்தரவை எதிர்த்து

வாஷிங்டன், ஏப்ரல். 01

போதை பாவனை பரிசோதனைக்கு உட்படவேண்டும் என்ற உத்தரவை எதிர்த்து அமெரிக்க ஜனுதிபதி புஷ் மீது வெள்ளை மாளிகை ஊழியர்கள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளை மாளிகை ஊழியர் 30 பேர் இவ் வழக்கை சமஷ்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றனர்.

போதைவஸ்து பாவிக்கப்பட்டதா என்பதை அறிய நடத்தப்படும் சிறுநீர்ப் பரிசோதனை சட்டவிரோதமானது என்றும்,

அரசமைப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப் பட்ட பாதுகாப்பை அந்த நடவடிக்கை மீறுவதாகவும் அமைந்திருப்பதாக வழக்கில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான பரிசோதனைக்கு உட்படவேண்டும் என்று உத்தரவிட்ட ஏனைய அரசு நிறுவனங்களுக்குஎதிராக இது போன்ற 50 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஆனல் அமெரிக்க ஜனுதிபதி மீது வெள்ளை மாளிகை ஊழியர் இப்படியான வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

பணம் இன்றி

## காசோலை திரும்புமானல் இந்தியாவில் சிறைத்தண்டனை

புதுடில்லி, ஏப்ரல். 2

வங்கியில் போதிய பணம் இல்லாமல் காசோலையைப் பிறருக்கு வழங்கும் செயல் இன்று முதல் இந்தியாவில் ஒரு குற்றமாகக் கருதப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைத்தண்டனையோ, காசோலையில் குறிப்பிட்ட தொகையில் இரண்டு மடங்கு அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

ஆனல் அன்பளிப்பாக வழங்கப்படும் காசோலைகள் இந்தப் பிரிவின் கீழ் வரா.

## பாலித்தீவில் அழகி பமேலா உயிருக்கு ஆபத்து என்று கவலை

பிரிட்டிஷ் அரசுக்குத் தலையிடியைக் கொடுத்து உள்ள அழகி பமேலாபோர்டஸ் இந்தோனேஷியாவிலுள்ள பாலித்தீவில் தலைமறைவாக இருக்கிருர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

27 வயதான முன்னுள் இந்திய அழகுராணி பமேலா பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர், லண்டனில் வெளியாகும் இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர்கள், லிபியாவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஆகியோருடன் பாலியல் தொடர்பு வைத்திருந்ததன் மூலம் அரசு இரகசியங்களைப் பெற்ருர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது தெரிந்ததே.

பாலியல் உறவு உளவுச் சம்பவம் அம்பலமானதைத் தொடர்ந்து அழகி பமேலா தலைமறைவாகி விட்டார்.

இப்போது அவர் பாலி தீவில் நண்பர்களுடன் தங்கியிருக்கிருர் என்று லண்டன் 'சன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

'நான் என்ன பிழை செய்து விட்டேன். என்னை ஏன் மற்றவர்கள் துரத்தி வருகிருர்கள் என்பது தெரியவில்லை'— இப்படி பமேலா சொன்னுர் என்று 'சன்' செய்தி வெளியிட்டது.

லிபிய இராணுவ அதிகாரியுடனன தொடர்பு வெட்டப்பட்டதன் காரணமாக என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது — இப்படி பமேலா கூறியதாக லண்டன் டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

## பாக். வரைபடத்தில் காஷ்மீர் நேபாளம் டெலிவிஷனில் படம்

இந்திய நேபாள — உறவு மேலும் விரிசல் கண்டு வருகிறது.

நேற்று முன்தினம் ஜம்மு — காஷ்மீரின் சில பகுதிகளைப் பாகிஸ்தானுடன் சேர்ந்த பகுதியாகக் காட்டும் வரைபடம் ஒன்றை நேபாள தொலைக்காட்சி காட்டியது.

இதுசம்பந்தமாக இந்திய அரசு நேபாள அரசுக்கு முறையிட்டுள்ளது.

ஏற்கனவே நேபாளதொலைக்காட்சி இவ்வரைபடத்தை இரண்டுமுறை காட்டியிருக்கிறது.

காத்மண்டுவில் உள்ள இந்தியத்தூதர் நேபாள வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துப் பேசினுர். (எ)

### ராணுவ தளம்

இந்திய விமானப்படையின் இராணுவ விமானத்தளம் ஒன்று தஞ்சாவூரில் நிறுவப்படவுள்ளது.

## பொய்யா மொழி

குறள்:-

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

பொருள்:

மனைவியின் காம இன்பத்துக்காக, அவளுடைய விருப்பத்தின் படி நடக்கிறவர்கள் வாழ்க்கையின் சிறந்த பயன்களை அடையமாட்டார்கள்; காரியத்தில் வெற்றி பெறவிருப்பம் உள்ளவர்கள் அப்படிச் செய்யக்கூடாது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
02 - 04 - 1989 த. பெ. இல: 23

## உரிய பலன் தருமா?

அரசாங்க ஆஸ்பத்திரிகளில், விசேட வைத்திய நிபுணர்கள், தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்கும் திட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசித்து வருவதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

இப்போது விசேட வைத்திய நிபுணர்கள், அரச ஆஸ்பத்திரிகளுக்கு வெளியே, நோயாளரிடம் பணம் பெற்று வைத்திய ஆலோசனை, சிகிச்சை என்பன வழங்கலாம். அந்த நோயாளிகளை அரச ஆஸ்பத்திரிகளில் சேர்த்து சிகிச்சையும் அளிக்கலாம். இதனை வழிப்படுத்தல் சிகிச்சைத் திட்டம் எனச் சொல்வர்.

இப்போது தனிப்பட்ட முறையில் வெளியே பணம் பெற்று வழங்கும் வைத்திய ஆலோசனையையும், சிகிச்சையையும் அரசாங்க ஆஸ்பத்திரியிலேயே வைத்து வழங்க வகை செய்வதே புதிய திட்டம்.

இந்தத் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னரும் அமுலில் இருந்த ஒன்றுகும். வைத்திய நிபுணர்கள் நோயாளிகளிடம் அறவிடும் கட்டணத்தில் குறிப்பிட்ட ஒரு வீதத்தை அரசுக்குச் செலுத்த வேண்டும் என்ற விதியும் அப்போது இருந்தது.

இந்தத் திட்டத்திஞல் —

- ★ வைத்திய நிபுணர்களின் சேவை ஆஸ்பத்திரிகளுக்குப் போதிய அளவில் கிடைக்கவில்லை.
- ★ அவர்கள் தனிப்பட்ட வைத்திய ஆலோசனைக்கும் சிகிச்சைக்குமே முதலிடம் தருகிருர்கள்.
- ★ அதனுல் பணமில்லாத, வசதி குறைந்த மக்களுக்கு விசேட வைத்திய நிபுணர்களின் சேவை கிடைப்பது அரிதாகிவிட்டது.
- ★ அது இலவச வைத்தியம் என்ற அரசின் கொள்கையை களங்கப்படுத்துகிறது — என்ற காரணங்களைக் காட்டி இந்தத்திட்டம் அப்போது கைவிடப்பட்டது.

ஆனல் இப்போது அரச ஆஸ்பத்திரிகளுக்கு வெளியே, அங்கு பணிபுரியும் வைத்திய நிபுணர்கள், வைத்திய ஆலோசனை, சிகிச்சை [illegible]ங்கும் முறை அமுலான பின்னர் —

ஏராளமான நோயாளர்[illegible] விசேட வைத்திய நிபுணர்கள் செல்லும் தனியார் நிலையங்களில் கூடுவதைக் காண முடிகிறது.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில், இலவச சிகிச்சைபெற அனுமதிச் சிட்டை பெறுவதைவிட தனியார் நிலையங்களில் பணம் செலுத்தி ஆலோசனை பெறுவது சிரமமான காரியமாகிவிட்டது. நீண்ட வரிசையில் நின்று சிட்டை பெறுவது, மட்டுமன்றி ஆலோசனை பெறவும் ஒரு நாளைச் செலவிடவேண்டி உள்ளது.

இப்போதைய இந்த அவலத்தைப் பார்த்தால் ஆஸ்பத்திரியிலேயே, வைத்திய நிபுணர்களின் தனிப்பட்ட சிகிச்சைத் திட்டத்தை அனுமதிப்பது நோயாளருக்கு அதிக வசதியாக இருக்கும் எனக்கூறத் தோன்றுகிறது.

எனினும் —

முன்னர் அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்ட குறைபாடுகள் மீண்டும் தலைகாட்டவே செய்யும்.

- ★ ஆஸ்பத்திரியில் போதிய அளவு நேரம் வைத்திய நிபுணர்கள் பணிபுரிய வேண்டும்.
- ★ குறிப்பிட்ட சில மணி நேரத்துக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையானேரை மட்டுமே ஒரு வைத்திய நிபுணர் தனிப்பட்ட முறையில் பார்வையிட வேண்டும்.
- ★ அறவிடப்படும் பணத்தில் குறிப்பிட்ட வீதம் ஆஸ்பத்திரிக்குச் செலுத்தப்பட வேண்டும்.
- ★ பணம் கொடுத்துச் சிகிச்சை பெறும் நோயாளிக்கும் இலவசமாகச் சிகிச்சை பெறும் நோயாளிக்கும் எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது.
- ★ இவ்வாறுன நிபந்தனைகளுடன் மற்றும் பல கட்டுப்பாடுகளையும் விதித்து அரச ஆஸ்பத்திரிகளில் தனிப்பட்ட சிகிச்சைத் திட்டத்தை வேண்டுமானுல் பரீட்சித்துப் பார்க்கலாம்.

வைத்திய நிபுணர்களின் தட்டுப்பாட்டால் ஏற்படும் கஷ்டங்களை இது நீக்கவும் கூடும்.

## ஈரான்கேட் ஊழல் வழக்கு றேகன் சாட்சியம் இல்லை

ஈரான் கேட் ஊழல் வழக்கில் முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி றேகனை சாட்சியமளிக்க நிர்ப்பந்திக்கப் போவதுஇல்லை என்று வாஷிங்டன் நீதிமன்றம் நேற்று தெரிவித்தது.

ஈரானுக்கு ஆயுதங்களை விற்றதனுல் கிடைத்த பணத்தை நிக்கரகுவா அரசுக்கு எதிராகப் போராடும் கொன்ருகிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்கியதாக வெள்ளைமாளிகை அதிகாரியான கேர்னல் ஒலிவர் நோர்த் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தற்போது வாஷிங்டனில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

தனக்குச் சார்பாக சாட்சியமளிக்க முன்னுள் அதிபர் றேகனை அழைக்க வேண்டும் என்று கேர்னல் நோர்த் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்து முன்கண்ட தீர்ப்பை வழங்கியது. (எ)

### விரகத்தி விநாயகர் பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, ஏப் 2

சாவகச்சேரி நுணுவில் மேற்கு வினைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 2 ஆம் திகதி ஞாயிறன்று காலை நடைபெறவிருக்கிறது. (ச-31)

## சகல மட்டத்திலும் சமாதானம்; கலைஞரின் விருப்பம் இதுவாம்

### ரெலோ பிரமுகர் கருத்து

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்பேசும் மக்கள் அமைதியுடன் வாழவேண்டுமென்றுல் சகல மட்டத்திலும் சமாதானம் வரவேண்டுமென்ற நிலைப்பாடே தமிழக முதல்வர் கலைஞர் கருணுநிதியிடம் காணப்படுகிறது.

இவ்வாறு ரெலோ பிரமுகரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கோ. கருணுகரன் (ஜனு) மட்டக்களப்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் அண்மையில்தமிழகம் சென்றிருந்தார். தமிழகமுதல்வர் கருணுநிதியைச் சந்தித்த ரெலோவின் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானம் நிலவ மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுக்கும் ஆக்க பூர்வமானபங்களிப்பை வழங்கக் கலைஞர் தயாராக இருக்கிருர் —

சமாதானத்துக்காகச் சகல தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் என்பதை அவர் விரும்புகின்றுர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும். இது குறித்துப் பேச்சு வார்த்தைகளைக் கலைஞரால் நடத்த முடியும் என்ற கருத்தை நாம் அவரிடம் வற்புறுத்தியுள்ளோம். —

அதற்காக எவ்வளவு தூரம் முயற்சி எடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் முயற்சி எடுப்பதாக அவர் எம்மிடம் உறுதி அளித்துள்ளார். அவரது முயற்சிக்குப் பலன் கிடைக்குமானுல் வரவேற்போம் என்றுர். (ஒ-21)

## சேர். பொன். இராமநாதனை திணறடித்த பண்டிதர்!

மாணிக்கத் தியாகராஜா பண்டிதர் அவர்களின் 112 ஆம் ஆண்டு நினைவாக அவர் எழுதிய ''வண்ணைச் சிலேடை வெண்பா'' வெளியிடப்பட்டுள்ளது.

41 வெண்பாக்களுடைய இந்த நூல் வண்ணை தையல் நாயகி சமேத வைத்தீஸ்வர நாதர் மேல் பாடப்பட்டது.

பண்டிதர் சிறந்த தமிழறிஞர், பேச்சாளர், சங்கீத விற்பன்னர், வேதாகம முறைகளிற் தெளிவு பெற்றவர்.

பண்டிதர் இந்தியாவுக்கும் கொழும்புக்கும்சென்று சமயப் பிரசங்கங்களை நிகழ்த்திஞர். அவருடைய தமிழ் அறிவையும் பேச்சாற்றலையும் கண்டு சேர் பொன் சகோதரர்களே பண்டிதரைத் தமது நண்பராக்கிக் கொண்டனர்.

சேர் பொன். இராமநாதனுக்கும் பண்டிதருக்கும்இடையில் ஒரு ருசிகரமான இலக்கிய நிகழ்ச்சி இடம் பெற்றது.

இராமநாதன் கல்லூரியில் ஒருநாள் சேர் பொன். இராமநாதன் பேச்சு நிகழ்த்திக்கொண்டிருந்தார். பண்டிதரும் முன்வரிசையில் இருந்தவர் பேச்சின் இடையில் தாயுமானவர் பாடலில் வரும் ''இனியேதெமக்குனருள்..'' என்ற பாட்டைத் தொடக்கி விட்டு அப்பாடலை பண்டிதரைப் பார்த்து 'பாடுங்கள்' என்றுர்.

பண்டிதர் பாடிஞர். அடுத்த வரியில் வரும் ஆடித் திரிந்து என்ற வரியைத் தொடக்கிய போது இராமநாதன் அவர்கள் பண்டிதரை இடைமறித்து இல்லை 'ஆடித்திரிந்து என்று நீங்கள் பாடுவது பிழை வாடித் திரிந்தது என்று பாடுங்கள்'' எனச் சொன்னுர்கள்.

அதைக் கேட்ட பண்டிதர் இராமநாதனைப் பார்த்து 'இல்லை — ஆடித்திரிந்து என்பது தான் சரி' என்று கூறி அதற்குரிய இலக்கண விதியையும் கூறியதோடு நாவலர் சுத்தப்பதிப்பிலும் 'ஆடித்திரிந்து என்றே இருக்கிறது என்றுராம்.

உடனே இராமநாதன்சபையோரைப் பார்த்து ''சபையோரே! சிறிது நேரம்அமைதியாயிருங்கள். நான் வாடித்திரிந்து' என்கிறேன். பண்டிதர் ஆடித்திரிந்து என்கின்றுர். இதன் உண்மை தெரிந்தபின் பேச்சுத் தொடரும்'' எனச் சொல்லி விட்டுத் தமது நூலகத்திலிருந்து தாயுமானவர் பாடல் - நாவலர் பதிப்புநூலை எடுப்பித்துப் பார்த்தார். அதில் பண்டிதர் சொன்னபடியே 'ஆடித்திரிந்து' என்பதாக இருக்கக் கண்டார்.

உடனே சேர் பொன். இராமநாதன் பண்டிதரையும், சபையையும் பார்த்து'நான் சொன்னது பிழை. பண்டிதர் சொன்னதே சரி. பிழை சொல்லித் தடை செய்ததற்குப் பண்டிதரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இனி பண்டிதர் பாடுங்கள்' என்றுராம். பண்டிதர் பாடிஞர்.

[''வண்ணைச் சிலேடை வெண்பா'' நூல் அறிமுக விழா இன்று நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை [illegible]]

### இன்று சிலேடை வெண்பா அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப் 2

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 5 மணி வரை குரு சி. மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் இயற்றிய வண்ணைச் சிலேடை வெண்பா அறிமுக விழாநடைபெறும்.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்,

துர்க்கா துரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நூலை வெளியிட்டு உரையாற்றுவார். (ச)

### யாழ் - கண்டி பஸ்சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப் 2

யாழ் – கண்டி பஸ்சேவை கள்வெள்ளி முதல் இடைநிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை யாழ் நகரிலிருந்து கண்டிக்குச் சென்ற பஸ்கள் சிங்களப்பகுதிகளின் ஊடாகப் பயணஞ் செய்ய அனுமதிக்கப் படவில்லையாம்.

பிரஸ்தாப பஸ்களின் சாரதிகளைச் சிங்களத் தீவிரவாதிகள் மிரட்டி இனிமேல் இங்கு வரவேண்டாம் எனக்கூறித் திருப்பியனுப்பினர் எனக் கூறப்பட்டது.

இதனை அடுத்து இந்த பஸ்கள் பயணத்தைத் தொடர முடியாதநிலையில் நேற்று யாழ் நகர் திரும்பின. (ஒ 9)

### சபாநாயகத்துக்கு புதிய பதவி

யாழ்ப்பாணம், ஏப் 2

கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் பணிப்பாளராக திரு. வெற்றிவேலு சபாநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதலாவது தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-5]

### வல்லை முத்துமாரி கொடியேற்றம்

வடமராட்சி, ஏப் 2

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து 16 நாட்கள் ஆலய உற்சவங்கள் நடைபெறும். (சு-160)

### சுவாமி சந்தானந்த ஜெயந்தி மலர்

யாழ்ப்பாணம், ஏப் 2

சுவாமி சந்தானந்தாவின் ஜெயந்தி தினவிழாவும் ராமகிருஷ்ணுலயம் ஓராண்டு நிறைவு விழாவும் 7 ஆம்திகதி வெள்ளிக்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள ராமகிருஷ்ணுலயத்தில் நடைபெறும்.

காலை 5 மணிக்கு பூஜை ஆராதனைகள் ஆரம்பமாகும். மாலை 3.30 மணிக்கு பஜனை பூஜைகள் நடைபெறும். கலை நிகழ்சசிகளும் இடம் பெறும். (ச)

### அத்தியடி பிள்ளையார் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் சஹஸ்ர சங்காபிஷேகம் இன்று 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று விநாயகர் வீதியுலாவும் இடம் பெறும். (ச)

### வண்ணை காமாட்சி அம்பாள்

யாழ்ப்பாணம், ஏப் 2

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தேர்த்திருவிழா 19 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் பிடவைகள்
* பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

02 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, : யாழ்ப்பாணம்.

## யுத்த நிறுத்த.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
கத்துக்கு வந்தனர்.

அந்தச்சமாதான திட்டமும் திங்களன்று வெளியிடப்படலாம். இது சம்பந்தமான உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் கடந்த வியாழன் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி பிரேமதாஸ, வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணைஅமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா, முன்னாள் சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்ன ஆகியோரும் ஐக்கியசோஷலிச முன்னணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். சமாதானத் திட்டத்தில் சுமார் 200 எம். பிக்கள் கைச்சாத்திடுவர்.

வன்முறைகளைக் கைவிடத் தீர்மானிக்கும் ஆயுத இளைஞர்கள் விசேடமாக உருவாக்கப்படும் இரண்டு கமிட்டியினரிடமும் தம்மை ஒப்படைக்க வேண்டும். இக் கமிட்டிகளில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளே அங்கத்துவம் வகிப்பார்கள்.

வன்முறையைக் கைவிட்ட இளைஞர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், களனி வித்தியோதய பல்கலைக்கழகத்திலும் அமைக்கப்படும் விசேட முகாம்களில் வைக்கப்படுவார்கள்.

இம் முகாம்களையும் இக் கமிட்டியினரே மேற்பார்வை செய்வார்கள். இங்கு இளைஞர்களுக்கு பல பொழுது போக்கு வசதிகள் செய்து தரப்படும்.

பின்னர் இளைஞர்கள் விருப்பப்படி அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும்.
(அ-எ)

## இன்று தேம்பாவணி

மேல் நாட்டு தமிழறிஞரான வீரமாமுனிவரின் ''தேம்பாவணி'' காவியத்துக்கு யாழ். திருமறைக் கலாமன்றம் ஒரு நாள் பெருவிழாவை இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 8-45 மணிக்கு மங்கள இசைப் பவனியுடன் விழா யாழ். மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெறும். (இ-51)

## உடற்பயிற்சி போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல்.2

எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்ிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் பின்போடப்பட்டுள்ளன.

## சுட்டுக் கொலை

சுழிபுரம், காளுவன் பகுதியைச் சேர்ந்த என். சுந்தரம் (வயது 45) என்பவர் கடந்த வியாழனன்று அவரது வீட்டு ஒழுங்கையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

வழக்கம்பரை முகாமிலிருந்து சடலத்தை, அவரது மனைவி பொறுப்பெடுத்துச் சென்றார்.

இறந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். (ஒ-28)

## நெடுந்தீவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
டியாக நெடுந்தீவை விட்டு வெளியேற வேண்டுமென மீனவர் அமைப்புக்கள், நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் ஆகியன வேண்டுகோள் விடுத்திருந்தன.

அதைத் தொடர்ந்து அவர்கள் படிப்படியாக வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இப்பொழுது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.
(ஒ-111)

## இந்திய....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஆயிரத்து 413 ரூபாவாகவும் கொழும்பு- திருவனந்தபுரம் கட்டணம் ஆயிரத்து 345ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – புதுடில்லி கட்டணம் 6,487 ரூபாவாகவும் கொழும்பு-பம்பாய் கட்டணம் 4,283 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதர வெளிநாடுகளுக்கான விமானக் கட்டணங்கள் 13 சதவீதம் முதல் 18சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
(உ-எ)

பிரத்தியேக வகுப்புக்கள்

A/L 1991

கணக்கியல்

ஆரம்பம்
03 - 04 - 1989

ஆசிரியர்
ஸ்ரீ B. Com (Hons

குறிப்பு:
முற்கூட்டியே அனுமதி பெற்றுக் கொள்ளவும் (குறிப்பிட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர்)

393/47 கோவில் வீதி,
நல்லூர்
(C/2053)

## கண்ணீர் அஞ்சலி



### டி. எஸ். கே. வணசிங்கா

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பெருமதிப்புக்குரிய முன்னைநாள் தலைவர் டி. எஸ். கே. வணசிங்கா அவர்கள் 30 – 03 – 89 ஆம் திகதி மரணம் அடைந்த செய்தி கேட்டு சங்கம் ஆழ்ந்த கவலை அடைகின்றது.

அன்னாரின் நீண்டகால தொழிற்சங்க சேவையை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் அஞ்சலி செலுத்தி பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்**

29, ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (C/1599)

## கண்ணீர் அஞ்சலி



### செல்லையா தவலோகநாதன்
(சந்திரன்)

வலி கிழக்கு (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம்

மலர்வு: 19 - 03 - 1950 உதிர்வு: 31 - 03 - 1989

''நெருநல்லுள னொருவன் இன்றில்லை யெனும்
பெருமை யுடைத்திவ்வுலகு''

கிளை முகாமையாளர் என்ற பதவியை பாவனை
ஆளர்கட்கும் சங்கத்துக்கும் அலங்கரித்துக்
காட்டிய சந்திரனே!
இறுதி வரை சங்கத்தின் ஒளிவிளக்காக இருந்து
காவியம் படைத்தவனே!
உனது வதன தோற்றத்தையும், புன்முறுவலையும்
என்று காண்போம்!
உமது இழப்பு எம்மால் தாங்க முடியாத,
ஈடு செய்ய முடியாத, பேரிழப்பாகும்!

அவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் குடும்பத்தவர், உற்றார், உறவினர் அனைவருக்கும் வலி கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது.

பணிப்பாளர், பணியாளர்,
கிளைக்குழு உறுப்பினர்.

[C/2054]

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சிதம்பரப்பிள்ளை நடராசா

[இளைப்பாறிய பிரதம களஞ்சியப் பொறுப்பாளர் ஓட்டுத் தொழிற்சாலை, ஓட்டுசுட்டான்]

ஊரெழு மேற்கில் வசித்த சின்னையா சிதம்பரப்பிள்ளை நடராசா 30 – 03 – 89 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்ற திரு. திருமதி சின்னையா சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலம் சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (மேற்கு ஜேர்மனி), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிடர் செல்வரத்தினத்தின் மூத்த மருமகனும், பஞ்சாட்சரத்தின் [உணவுத் திணைக்களம், முல்லைத்தீவு] அன்புச் சகோதரரும், கதிரமலைநாதனின் [பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், புத்தூர் கிழக்கு] மருமகனும், ஸ்ரீஸ்கந்தராசா, சண்முகராஜா [செயலகம், யாழ்ப்பாணம்], குகநாதன் [யாழ் பல்கலைக்கழகம்], விமலராசா, சரோஜினிதேவி, காலம் சென்ற திருமதி சகுந்தலாதேவி நடேசரத்தினத்தின் மைத்துனரும், அருட்செல்வனின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03 – 04 – 89 திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி கதிரமலைநாதன்
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (10256)

### வெற்றிவேலு சிவகுருநாதபிள்ளை

கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவரும், வெற்றிவேலு போதன நிலையத்தின் பொறுப்பாளருமாகிய வெற்றிவேலு சிவகுருநாதபிள்ளை 01 – 04 – 89 சனிக்கிழமையன்று காலமானார்.

இவர் வெற்றிவேலு பூபாலசிங்கம், காலம் சென்ற வெற்றிவேலு துரைசிங்கம் ஆகியோரின் சகோதரர் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 02 – 04 – 89 இன்று ஞாயிற்றுக்கிழமை டிஸ்பென்சரி லேன், உரும்பராய் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக 3.00 மணிக்கு இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெ. பூபாலசிங்கம்
(10257)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தவலோகநாதன்

கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயைச் சேர்ந்த செல்லையா தவலோகநாதன் (சந்திரன்) 31-03-1989 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

இவர் வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூட்டுறவுச் சங்க இருபாலைச் சந்திக் கிளை முகாமையாளரும், காலஞ்சென்ற இ. செல்லையாவினதும் பாக்கியத்தினதும் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சி. கந்தையாவினதும் நாகம்மாவினதும் அருமை மருமகனும், கமலேஸ்வரியின் (ரதி) அன்புக் கணவரும், ராஜ்குமார், தர்மராஜ், கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமநாதன், நவரத்தினராஜா, கௌரிமலர், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரவிக்குமார், சோமசுந்தரம், அன்னலிங்கம், இராசரத்தினம், அமுதம்மா, பாஸ்கராதேவி, சுபாசினி ஆகியோரின் மைத்துனரும், நிருஜா, அஜித், மனோஜா ஆகியோரின் பெரியப்பாவும், சாழினியின் மாமனுருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-04-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. அன்னலிங்கம்
C. G. R. (மைத்துனர்)
கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய். (சி/1598)

### இராமு கதிரவேலு

இடைக்காட்டைச் சேர்ந்த இராமு கதிரவேலு காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ரவிக்குமார், றதி, ராதா, உதயகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் துன்னாலையில் நடைபெறும்.

தகவல்:
க. பாலசுந்தரம்
கோவிற்கடவை,
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (51)

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 31-03-89 இல் சிவபதம் அடைந்தார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கணேசன், மகேஸ்வரி, மகேசன், சிவலோகநாதன் (பொறியியலாளர்), பத்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனும்பிகை (சங்கீத பூஷணம்), இராசையா (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), விசாலாட்சி (ஆசிரியை), இலங்கை நாராயணன் (D.M.O முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனும் காலம் சென்றவர்களான பசுபதி சின்னத்தங்கம் செல்லத்துரை ஆசிரியர், செல்லக்குட்டி பாக்கியம் ஆகியோரினதும், குமாரசாமி (ஜோதி பிடவை) வேலுப்பிள்ளை பரிபூரணம், ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-4-89 இன்று பி. ப. 4 மணி அளவில் சாவகச்சேரியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி மக்கள்
மருமக்கள்.
பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி. [10254]

### திருமதி ரோகிணி நடராசா

வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரோகிணி நடராசா காலமானார். இவர் V. K. நடராசா (ஓய்வு பெற்ற மதுவரிப்பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், விமலாதேவி கருணாமூர்த்தி (Electrical Supdt. இலங்கை மின்சாரசபை), சுதந்திரமூர்த்தி (Worke Supdt இலங்கைத்துறைமுக அதிகாரசபை), கமலாதேவி (லண்டன்), அரிஹரமூர்த்தி (சுவிஸ்), நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், தேவராசா, விமலாதேவி, அம்பிகா, குகனேயன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், தயந்தன், தாரிணி, தயந்தி, தபேஷன், சங்கரி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் காங்கேசன்துறையில் இன்று 2-4-89 ஞாயிற்றுக்கிழமை 3. 00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
V. K. நடராசா.
குருவீதி,
காங்கேசன்துறை. (61)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 02 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.